312

312
4.56

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் இளவழகனார்.

கிளை-7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத ஆவணி கஅ 2—9—55 தளிர்-48

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 OCT 1955
MADRAS

## குருகுலத்தின் குறிக்கோள்

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

### ஒழுக்க நிறைவு

ஒழுக்கமுடைமை பெரும்பாலும் செய்கையை ஒட்டியது; வாக்கும் மனமும் இச் செய்கைக்குக் காரணமாய் இருக்கும். மனத்தளவில் கருக்கொண்டு வாக்களவில் உருக்கொண்டு உடல் அளவிற் செயற் கொண்டு நடக்கும், ஒழுக்கம் என்பது. நல்லொழுக்கத்திற்கு இங்ஙனம் மனம் வாக்கு காயம் மூன்றாலும் தொடர்ந்த பெரும் பயிற்சி வேண்டும்.

அப் பயிற்சிகளால் செய்கையில் விளங்கித் தெரிவது ஒழுக்கம்; ஆதலால், மனம் பண்பட்ட செயல்முக நினைவும் வாக்கு பண்பட்ட செயல்முகச் சொல்லும் கொண்டிருப்பவர்களுக்குக் காயமும் பண்பட்ட செயல்முக நடத்தையிற் சிறக்கும். அறிவுடையோர் என்று அப்போதுதான் அவர்களைப் பாராட்டமுடியும்.

ஒருவர் தம் அளவில் எல்லா நலங்களும் உடையவராய் நடந்துகொள்ளலாம், நன்மனமும் நல்வாக்கும் நல்ல அடக்க வொடுக்கமாகிய காயச் செயல்களும் உடையவராகக்கூட நடந்துகொள்ளலாம்; அதனாலேயே அவரை ஒழுக்க நிறைவு உடையவரென்று கூறிவிட இயலவில்லை; திருவள்ளுவரே அவரை ஒழுக்க அறிவு இல்லாதவர், அதாவது நடைமுறையறிவு இல்லாதவர், அறிவிலாதார் என்று பயனில்லாதவராக அன்றோ ஒதுக்கிவிடுகின்றார்; மற்று, அவரால் யாருக்குத்தான் என்ன பயன்?

உலகமோ எப்போதும் ஒருவரால் ஒருவ பயன்கொள்ளும் முறையில் இயங்கிவருகின்றது; உலக நடை என்பதன் உட்பொருளே இது! அப்படிப்பட்ட இந்த உலகத்தில், பிறர்க்கு உதவிமுகமாயிராத நடத்தையுடையவரை ஒழுக்கமுடையவர் என்று எப்படிச் சொல்லிவிடுவது; பிற வகைகளில் அவர் எவ்வளவுதான் நல்லவரானாலும் அதாவது மனம் வாக்கு காயங்கள் என்னும் மூன்றிலுமே தூயவரானாலும் உலக நடையில் அவர்க்கு இடம் எது? தூய்மையோடு கருணைகூர் முகமுங் கொண்டு நடந்துகொள்ளுகிறபோதுதான், அவர் ஒழுக்கம், நிறைவுடையதாய்ப் பொலியும்!

பண்பட்ட பயன்முகச் செயலறிவுதான் ஒழுக்கமுடைமையை நிறைவாக்கும். இந்த உண்மையை அறிவுறுத்துவதுதான் இந்தக் குறளில் வருவது; இப்படிப் பார்க்கும்போது, உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லாதார், பல கற்றும் அறிவிலார்தானே!

**உலகத்தோ டொட்ட ஒழுகல், பல கற்றுங்**
**கல்லார் அறிவிலா தார்.**

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார்—பல கலைகள் கற்றும் உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கற்றுக்கொள்ளாதவர் அறிவிலாதார்—அறிவு நிரம்பாதவரேயாவர்.

நூல்களிற் கற்ற கொள்கைகளை உலக நடையோடு ஒட்டிச் சென்றேறிறவேண்டுமாதலின், அவ் வறிவு நடையில்லாதார் 'பல கற்றும் அறிவிலாதார்' என்றார். செயல் முறையறிவு இல்லாதார் இங்கே அறிவில்லாதார் எனப்பட்டனர். நூலறிவு செயல் முறையறிவாய்ப் பண்பட்டாலன்றிப் பயன்படாதாதலின், வெறும் ஏட்டறிவை ஆசிரியர் இவ்வாறு பொருள் செய்யாதுரைத்தார். 'பல கற்றும் அறிவில்லார்' என்று துணிந்துரைப்பதற்கு, அவ் வொட்ட வொழுகல் எவ்வளவு முதன்மையுள்ளதாய் இருக்கவேண்டும்.

உலகத்தோடு; உலகத்தின் இயற்கை நிலைமைகளோடு; உலகத்திலுள்ளவர்கள் இயற்கை நிலைகளோடும்; உலகத்திலுள்ளோரில் உயர்ந்தோரும் உண்டு, தாழ்ந்தோரும் உண்டு, உயர்ந்தோர் வழியில் தாழ்ந்தோர் இணங்கி நடந்துசெல்வதே முறை; அதற்கு உயர்ந்தோராயுள்ளவர் தாழ்ந்தோர் இயல்புகளையறிந்து அவற்றிற்கேற்ற முறைகளில் உயர்வுகளைத் தெளிவு செய்து உயர்த்துதல் கடமை. நூல்கள், உயர்ந்தோரால் ஆக்கப்பட்டு

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.


| இலை | மன்மத, ஆவணி, | தளிர் |
|---|---|---|
| 7 | 2-9-55 வெள்ளி. | 48 |


# இந்தியா-சீனா இடையே 2000 ஆண்டுத் தொடர்பு

2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட ஏராளமான. சீன இலக்கிய நூல்களை அண்மையில் குடியரசு சீனாவுக்குச் சென்று இந்தியா திரும்பியுள்ள இந்திய பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ரகுவீரா கொண்டு வந்திருக்கிறார்.

செய்தி நிருபர்களிடம் அவர் பேசுகையில், சீனாவிலிருந்து 8 டன்கள் நிறையுள்ள லித்தோகிராப் ஓவியம், இலக்கியங்கள் இவற்றைத் தாம் கொண்டு வந்திருப்பதாகவும், இவை தற்போது நாகபுரி இந்தியக் கலாசார சர்வதேசக் கழகத்தில் 77 பெட்டிகளில் பாக் செய்யப்பட்டுக் கிடப்பதாகவும் கூறினார்.

இந்த இலக்கியங்கள், படங்கள் இவற்றில் 5-ல் 4 பங்கு இந்தியாவில் இதற்கு முன் பார்க்கப்படவில்லை என்றும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் இரு நாடுகளிடையே இருந்த கலாசாரத் தொடர்பை இவை எடுத்துக் காட்டுவதாகவும் டாக்டர் ரகுவீரா கூறினார்.

சீன முதல்வர் சௌ என் லாயின் முயற்சியின் பேரில் தமக்குக்கிடைத்த இந்த இலக்கியம், ஓவியங்களைப் புதுடில்லியில் அக்டோபரில் மக்களுக்குக் காட்டப்போவதாகவும் அவர் கூறினார்.

சீனாவின் பெரிய மதிலின் மேற்குப் புற வாயிலுக்கு அப்பால் உள்ள மன் ஹுவாங்குகைகளில்பொறிக்கப்பட்டிருந்த சுவர் சித்திரங்களை சீனா சர்க்கார் நிழற்படக்காரர்கள் உதவியுடன் தாம் சில அரிய வர்ணப் புகைப்படங்களாக எடுத்திருப்பதாகவும் இந்தச் சித்திரங்கள் 1901-ம் ஆண்டிலேயே கண்டுபிடிக்கப்பட்டதாகவும் டாக்டர் ரகுவீரா கூறினார். இதில் 476 பெரிய சிறை குகைகள் இருப்பதாகவும், உலகிலேயே இதுதான் மிகப் பெரிய கலைக்கூடமாகுமென்றும், சீனர்கள், மங்கோலியர்கள், திபேத்தியர்கள், இந்தியர்கள் கிரேக்கர்கள் துருக்கியர்கள் இரானியக் கலைஞர்களால் கி. பி.366-1936க்குமிடையே இந்தச் சித்திரங்கள் வரையப்பட்டதாகக் கல்வெட்டுகளிலிருந்து தெரிவதாகவும் டாக்டர் ரகுவீரா கூறினார். குகைகளுக்குள் பெரிய 'சம்ஸ்கிருத சிலாசாசனமும்' இருப்பதாகவும் இவை இந்தியாவிலுள்ள அஜாந்தா ஓவியங்களைப் போல் இருப்பதாகவும் டாக்டர் ரகுவீரா கூறினார்.

## சீனாவில் சைவமும் பரவியிருந்தது

கும்பம் பௌத்த மடத்தில் 2000 லாமாக்கள் இருப்பதாகவும், 300 மாகான்கள் பற்றிய ஓவியங்களைத் தாம் சேகரிப்பதாகவும், இந்தியாவுக்கு வந்த பேர்பெற்ற சீன யாத்ரீகர் ஹுயூவான் சாங்கின் ஓவியமும் தமக்குக் கிடைத் திருப்பதாகவும், டாக்டர் ரகுவீரா கூறினா. மஹிஷாசுரனைக் காளிதேவி கொல்வதைச் சித்திரிக்கும் ஒரு படத்தை டாக்டர் ரகுவீரா காட்டினார். இந்தப் படத்தைத் தாம் பீகிங்கில் ஒரு கோவிலிலிருந்து பெற்றதாகவும், சீனா, மங்கோலியா திபேத்தில் புத்த மதத்துடன் சைவ மதமும்பரவியிருந்ததாகவும் டாக்டர் ரகுவீரா கூறினார்.

மங்கோலியா, திபேத், மஞ்சூரியாவில் இந்தியக் கலாசாரம் பரவி யிருந்ததற்கான அடையாளங்களைத் தாம் கண்டதாகவும், டாக்டர் ரகுவீரா கூறினார். பல பழைய புத்தகங்களில் சம்ஸ்கிருத சுலோகங்கள் எழுதப்பட்டிருப்பதாகவும், ஹிந்துக்களின் மகா மந்திரமான காயத்திரி மந்திரம் உள்பட சம்ஸ்கிருத மந்திரங்கள் சீனா மங்கோலியா, மஞ்சூரியாவில் உள்ள ஹிந்து, புத்த கோவில்களில் ஓதப்படுவதாகவும், டாக்டர் ரகுவீரா கூறினார். சமாதானத்தை விரும்பும் சீன மக்கள் கோவில்களில் சமஸ்கிருதத்தில் சாந்தி மந்திரங்களை ஓதுவதாகவும், அவர் உரைத்தார். பல புத்த மதக் கோவில்களைப் புதுப்பிக்க சீனசர்க்கார் பணம் செலவிடுவதாகவும் பீகிங்கில் மாத்திரம் ஒரு கோவிலுக்கு ரூ. 2 லட்சம் வரை செலவிடப்பட்டிருப்பதாகவும் அவர் உரைத்தார். பீகிங்கிலும், இதர நகரங்களிலும் பிச்சைக்காரர்களே கிடையாது. 5 ஆண்டுத் திட்டத்தின் கீழ் மக்கள் ஒவ்வொருவரும் தமக்குள்ள பங்கைத் தெரிந்து கொண்டு அதை நிறைவேற்றி வருகிறார்கள்.

முன்காலத்தில் இந்தியாவிலிருந்து சீன யாத்ரீகர்கள் இலக்கியத்தை எடுத்துச் சென்றனர். சீனாவுக்கும் இந்திய மேதைகளையும் அழைத்தனர். சீனாவிலிருந்து இலக்கியத்தை இந்தியாவுக்கு எடுத்து வந்த முதல் இந்தியர் 'நான்தான்' என்று டாக்டர் ரகுவீரா கூறினார்.

## பாவலரும் காவலனும்

'மணி மொழி'

காட்சி 2

இடம்: அரசவை.

உறுப்பினர்: அரசன், புலவர் வெள்ளைக்குடி நாகனார்; வாயிற் காவலன்.

வாயிற் காவலன்: வாழ்க செந்தமிழ் வாழ்க வளவன்
வெள்ளைக் குடிவாழ் நல்லிசைப் புலவர்
சொல்லின் செல்வர் நாகனார் வாழ்க!

வளவன்: நல்லிசைப் புலவர்!..........நாகனார்!!

(அவை புகுந்த புலவரை எதிர் சென்று வணங்கி)

நாவுக் கரசே நற்றமிழ் வேந்தே
பாகுத் தமிழே பைந்தமிழ்த் தலைவ
கூடல் தமிழின் கொழுந்தே என்றும்
வாடா இளமை வண்டமிழ்ப் புலவ!
தீந்தமிழ் மலையே திகழொளி விளக்கே
தேன்தரு தமிழே வான்தரு மழையே
மூன்று தமிழால் முப்பொருள் உணர்த்தும்
ஓங்கிய சிறப்பின் உயர்குணக் குன்றே
வருக பெரியீர் வருக வணக்கம்!

புலவர்: வாழ்க மன்னவ வாழ்கநின் கொற்றம்
வையம் வாழ வாழிய சிறந்தே!

வளவன்: ஊனில் உயிரில் கலந்துள இனிக்கும்
உவட்டாத் தண்டமிழ் நல்விருந் தின்று
வாய்க்கப் பெற்றேம்.
....வழங்குக ஐய!

புலவர்: ஆழ்கட லுடுத்த வானஞ் சூடிய
பேரிரு வையந் தாங்குந் தண்டமிழ்
நீள்நில முழுதும் நீங்கா உரிமை
பூண்டு முரசொடு போர சாளும்
நீண்முடி வேந்தர் மூவ ருள்ளும்
அரசெனப் படுவது நினதே பெரும!
கீழ்த்திசை ஞாயிறு நாற்றிசை தோன்றினும்
பாழ்செயும் குறியெனப் பாரோர் செப்ப
மாசில் வெண்மீன் தன்திசை மாறி
ஏகும் படியாய்த் தென்திசை யேகினும்
குடமலைப் பிறந்து மணமிகு பொருள்கள்
பலபல ஏந்திப் பரவி பொழுகி
வளம்பல பெருக்கும் வனப்பின் பொன்னி
வேறுவே றுருவில் வேறுவேறு செல்வம்
ஊறுபல ஒழித்தே ஊட்ட மறவர்
வேற்றுமுனை நோக்கி வீறுகொண் டெழுந்து

## பரிமேலழகரின் உரைநயம்

(புலவர். முருகவேள். B. O. L)

தோற்றுவாய்:

திருக்குறளுக்குத் தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் என்னும் பதின்மர் உரை வரைந்ததாகக் கூறுவர். ஆயினும், ஏனையவர் இயற்றிய உரைகளை எல்லாம் விட மிகவும் தலை சிறந்து நிற்பது, ஆசிரியர் பரிமேலழகரின் உரையேயாகும் என்பது அறிஞர்கள் கருத்து. "நூலிற் பரித்த உரையெல்லாம் பரிமேலழகன் தெரித்த உரையாமோ தெளி" எனப் பரிமேலழகரின் உரைச் சிறப்பினைப் பண்டைப் பெரியோர்கள் பாராட்டி மகிழ்ந்தனர். தமிழிலுள்ள தலை சிறந்த நூல்கள் இவை எனத் தொகுத்துணர்த்த விரும்பிய ஒரு பேரறிஞர், திருவள்ளுவர் தம் திருக்குறளை மட்டுமேயன்றி, அத் திருக்குறளுக்குத் "தெள்ளு பரிமேலழகன் செய்த உரை"யையும், "தண்டமிழின் மேலாந் தரம்" எனப் போற்றிச் சிறப்பிக்கின்றார்!

உரையாசிரியர்களின் சிறப்பு:

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள், நூலாசிரியர்களைவிட ஒருவகையில் உரையாசிரியர்களே சிறந்தவர்களாவர் எனக் கருதுகின்றார். ஏனெனில், கவிஞர்கள் தம் பாடல்களிற் சிலவிடங்களில் வருவதற்குரிய "கண்" முதலிய உறுப்புகளை வரவிடாமல், தொகையாகவே அமைத்துக் கொடுத்து விடுவார்கள்; ஆனால் உரையாசிரியர்களோ அங்ஙனம் நூலாசிரியர்களால் தொகையாக அமைத்துக் கொடுக்

தூக்கிய வேலின் தொகுதி போல
பாகுக் கரும்பின் வெண்பூ ஆடும்
நாடா வளத்து நாடெனப் படுவது
நினதே யன்றோ வளவ கேளாய்
அறமே செங்கோற் கோலம் பூண்டு
ஆய்ந்தது போலும் அமைந்துளம் ஒருபால்
சாய்த லின்றித் துணிந்த நீதி
முறையுங் குறையும் வேண்டினோர்க் கென்றும்
காட்சிக் கெளியராம் காவல் வேந்தர்
துளிவேண்டு பொழுதில் பெருமழை பெற்றுக்
களிப்போ ரவர் காண்குவை, வெய்யோன்
விரிகதிர் பெருநிலம் எரிப்பது காக்கத்
திரண்டு திரண்டெழுந் தருண்டு வெண்முகில்
நெடிதுயர் வானத்து நடுநின் றூற்போல்
ஒளியுமிழ்ந் துயர்ந்தே ஓங்குநின் வெண்குடை
சுடுகதிர் தடுக்க எடுத்ததோ அன்றே!

வளவன்: ஐய! ........

புலவர்: குடியுறு துயரம் தடுப்பதே வளவ!
கறுத்து...வலிதாய்ப் படுத்த பணையை
அறுத்தறுத் தாங்கே உருட்டியது போலச்
செருக்குடன் எழுந்த களிறு வெட்டிக்
குருதி தோயும் பெருநில மெங்கும்
பரக்க உருட்டி மறவர் வீழ்த்தி
வாளைச் சுழற்றி வெம்போர் செய்து
செருக்கள வேள்வி எடுத்து வெற்றிக்
களிப்பு மிகுந்து எழுந்த ஆர்ப்பும்,
வாளொடு பொருந்தும் வகைத்திற மறியார்
வாழ்வதில் சாவதே வாழ்வாம் என்று
வாள்புகு மிடந்தொறுந் தாம்புகுந் திறவார்
மாளும் உயிரைப் பாகென நச்சித்
தோள்வலி இழந்து தோள்துணை நாடி
தாள்தலை யிடியுற முதுகு காட்டி
நாடு நோக்கி ஓடுவார் கண்டு
எள்ளி நகைக்க எழுந்த ஆர்ப்பும்
பொன்னென வலியே தந்ததோ அன்றே!
புள்ளினம் எழுமுன் துள்ளி எழுந்து
நன்னில மூற்று நாஞ்சில் ஊன்ற
வள்ளலே ஆங்கு வாய்த்தது ஆகும்.

வளவன்: (அமைச்சரை நோக்கி மெல்லிய குரலில்)
அறம்பிழைத் தாரோ ஆணை யாளர்

புலவர்: பருவம் இதுவென ஒருங்குடன் கூடிப்
பெருங்கடல் படிந்து நீர்முகந் தூண்டி
இருநிலம் காக்கத் திரும்பி வானேறி
குளிர்ந்து தாழ்ந்து பெயல்தரு மழையே
பெய்யுங் காலத்துப் பெய்யா தொழியினும்

கப் பெற்ற "கண்" முதலிய இவ் வுருபுகளை, வரவழைத்துக் கொடுத்துப் பொருள் நலத்தினை விளக்கிக் காட்டுவார்கள். எனவே, அழித்தற்றொழில் செய்யும் நூலாசிரியர்களைவிட, அழித்த வற்றை ஆக்கித் தர வல்ல உரையாசிரியர்களே ஒரு வகையிற் சிறந்தவர்களாவர் என்னும் கருத்தமைய,

"கண்ணைக் கெடுப்பவர்
கவிராயர் அக்கண்ணை
எண்ணி உரைகாரர்
ஈவாரே—மண்ணின்மேல்
ஆக்கு பவரோ, அழிப்பவரோ
மேலாவார்?
நோக்கிநீ நன்றே நுவல்"

எனச் சிறிது நகைச்சுவை தோன்றப் பாடுகின்றார் அவர்! இவ்வாற்றால், உரையாசிரியர்களையும் உரை நூல்களையும் எளிமையாக எண்ணிவிடாமல் தகுதி யறிந்து போற்றிச் சிறப்பித்தல் வேண்டும் என்பது பெறப்படும். ஆங்கில மொழியிற் சேக்ஸ்பியரின் நூல்களைப்போலவே, அவற்றிற்கு அல்ரிசி, கெர்வினஸ், ஷ்லிகல், ஸ்வின்பர்ண், டௌடன், ப்ரூக், ப்ராட்லி, சைமண்ட்ஸ், ஹட்சன், மூல்ட்டன், கார்சன், பிராண்டிஸ் முதலிய அறிஞர்கள் பலர் ஆராய்ந்து வரைந்த பேருரைகள் மிகவும் மதித்துப் போற்றப்படுதல் ஈண்டுக் கருதுதற்குரியது.

பரிமேலழகரும் அறிஞர்களும்:

திருக்குறளுக்குப் பரிமேலழகர் இயற்றிய உரையினை மிக்க சிறப்புடையதாகக் கருதிச் சிவப்பிரகாசர், சிவஞானமுனிவர், கச்சியப்ப முனிவர் போன்ற பெரும் பெரும் புலவர்கள் எல்லாம் மனப்பாடம் செய்து பயின்றிருந்தனர் என்பதற்கு, அவர்தம் நூல்களிற் சான்றுகள் காணப்படுகின்றன. அண்மைக் காலத்தே மிகவும்

பயன்தரு பல்பொருள் விளைவு குன்றினும்
இயற்கையி னீங்கிய இயல்பே மக்கள்
செயலில் தோன்றினும் வியன்பேர் உலகம்
கொற்றவர் தூற்றும் கொடுங்கோல் என்னும்
மற்றீ துணர்ந்து மாசுறு குணத்தால்
ஏதிலார் குற்றம் எடுத்தெடுத் துரைத்து
நாத்தழும் பேறிய நயனில் மாக்கள்
போற்று வுரைகள் போற்று இந்தப்
பார்சுழல் வதற்கோர் ஆணியின் நின்று
பாரை யூட்டும் ஏரைக் காப்போர்
குடியைக் காத்து குடைநிழல் செய்யின்
அடிக்கீழ்ப் படுவர் அடங்கா தோரே!

வளவன்: உற்றது தெளிந்தேன் உறுகுறை களைவேன்
செற்றம் நீங்குக செந்நாப் புலவ!
எம்மொடும் இருந்து எமக்காம் நல்லறம்
எடுத்துக் காட்டித் திருத்தி யருள
வேண்டுவல் ஐய வேண்டுவல் பெரிதே.

புலவர்: அறம்விழைந் தியற்றும் ஆற்றல் கொண்டோய்
மறத்தில் குன்றாச் சிறப்புடைச் செம்மல்
நன்னன் உவகை நான்சிறி தண்ண
என்னூர் சென்று சின்னாள் தங்கி
நும்மை வருவேன் அருளுக பெரும!

வளவன்: ஆயின்ஐய மறுத்துரை செய்யேன்
தூயதே எண்ணித் தூயதே சொல்லித்
தூயதே செய்யத் துணையாய் நின்றீர்
ஆயபல் நலமெலாம் அனைவருங் களிக்க
நானும் நுகர்ந்து பெருகிய காதலால்
(பரிசிலைச் சுட்டி)
இவையெலாம் உரிமையால் உமக்கே ஆக்கினேம்
ஏற்றருள் செய்தெமைக் காத்தல் வேண்டும்.

புலவர்: அளக்கரும் சிறப்பின் அடக்கமும் அன்பும்
புலவர் போற்றும் பண்பும் கொண்டோய்
வளவ நின்திறம் எங்ஙனம் பாடுகேன்
வரம்பில் வெளியில் வந்து தோன்றி
வையகம் ஆக்கும் வெய்யோன் போலும்
இரவில் விளங்கி இன்பம் சொரியும்
எழில்வெண் திங்கள் போலவும், பொன்னி
ஆறு கொழிக்கும் மணலினும் பன்னாள்
நீளுக நின்னாள் நீளுக சிறந்தே.
(விடைபெற்றுச் செல்லல்)

முற்றிற்று

குறிப்பு: புறநானூற்றின் 35-ம் பாட்டு இதற்குப் பயன்பட்டது.
பாடியவர்: வெள்ளைக்குடி நாகனார்.
பாடப்பட்ட அரசன்: கிள்ளிவளவன்.

சிறந்த உரையாசிரியர்களாக விளங்கி யிருந்த நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களும், முதுபெரும் புலவர் கதிரேசஞ் செட்டியார் அவர்களும் திருக்குறட் பரிமேலழகர் உரையினைத் திறம்பட முழுவதும் திருத்தமாக மனப்பாடம் செய்திருந்தனர் என்பதனை, அவர்களை அறிந்தவர்கள் அனைவரும் உணர்வர். அதனாலேயே, அவ்விருவரும் சிறந்த உரையாசிரியர்களாக விளங்க முடிந்தது. இங்ஙனமே ஆசிரியர் மறைமலை அடிகளார் அவர்களும் பரிமேலழகர் வடநூற் கருத்துக்களை வலிந்து புகுத்தி எழுதிய ஒரு சில இடங்களை மட்டும் புறக்கணிப்பதன்றி, ஏனை இடங்களிலெல்லாம் அவர்தம் உரைத்திறத்தினை இகழ்ந்தாரல்லர். இவற்றாலெல்லாம் பரிமேலழகரின் உரைச் சிறப்பு எத்தகையது என யாவரும் அறியலாம். "ஒரு குழிசிச் சோற்றிற்கு ஓரவிழ்பதமாம்" என்னும் முறை பற்றி, பரிமேலழகரின் உரைநயம் விளக்கும் ஒருசில குறிப்புக்களை மட்டும் ஈண்டுக் காண்போம்.

## பரிமேலழகரின் அருமைப்பாடுகள்:

பரிமேலழகர் தூய தனித்தமிழில், அழகிய இனிய சுவைமிக்க நடையில், சொற்சுருங்கிப் பொருள் விளங்கும் முறையில், தம் உரையை அமைத்துள்ளார். இனிய உரைநடை வகையும் திறனில், ஏனைய உரையாசிரியர்கள் எவரும் இவர்க்கு இணையாக மாட்டார்கள். இவர் வரையும் "பதசாரங் (சொற் சிறப்புரை) கள்" மிகவும் சுவைபயப்பனவாகும். "கோளில் பொறியில் குணமிலவே...." என்னும் திருக்குறளுக்குப் பரிதியார் என்பவர் "கோளாகிய நவக்கிரகங்களும், புலனறிய கண்வாய் மூக்குச்செவி

மெய்யென்னும் ஐம்புலன்களும் உண்டாகிலும் பயன் இல்லை. எட்டுக் குணங்களுடைய சிவன் சிவந்த தாளை வணங்காத தலை சித்திரத்தில் எழுதிய மரப்பாவைக்கு நிகராம்" எனச் சொற்களுக்குத் தம் மனஞ் சென்றவாறு பல பிழைபடப் பொருள் கூறிச் செல்வதுபோல் அல்லாமல், பரிமேலழகர் சொற்களுக்கு வரையறுத்துப் பொருள் கூறும் இயல்பில் தனிச்சிறப்பு மிக்கவர். பிற்கால நெறி சாராமல், பண்டைச் சங்கநூல் வழக்கினையே தழுவி, ஒவ்வொரு சொற்கும் உரிய பொருளை நுணுகியாராய்ந்து செவ்விதிற் கூறுவர் பரிமேலழகர். ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரையிற் போலக் கொண்டு கூட்டு, மாட்டேறு முதலிய சுவையற்ற உரைகொள் முறைகளை இவர் உரையிற் காண்டல் அரிது.

"கற்றபின்":

நம்மனோர் எளியவாகக் கருதிவிடுக்கும் இடங்களிலும், இவர் பல நுண்பொருட் குறிப்புக்களை அமைத்து வைப்பர்; பல சிறந்த அழகிய இனிய கருத்துக்களைக் கண்டெடுத்து விளக்குவர். மிகவும் ஆழ்ந்து காணவல்லவர்க்கு, இவர்தம் நுண்மாண் நுழைபுலம் எங்கும் புலனாகும்.

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்னும் குறளை அறியாதார் எவருமிரார். அக்குறளில் வரும் "கற்றபின்" என்னும் சொல்லுக்குப் பொருள் கேட்பின், "கற்றபிறகு" எனவே இயல்பாக யாவரும் பொருள் கூறுவர். அண்மையில் திருக்குறளுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் அனைவரும் "கற்றபிறகு" எனவே ஒருமுகமாகச் சேர்ந்து பொருள் எழுதினர். ஆனால் பரிமேலழகரோ "கற்றால்" எனப் பொருள் எழுதினர். மிக நுண்ணிய இச்சிறு வேறுபாட்டினை ஊன்றி நோக்கி, ஏன் இங்ஙனம் எழுதினார் என ஆராய்ந்து காண முயலுபவர்க்கன்றி, ஏனையோருக்குப் பரிமேலழகரின் உரைச் சிறப்பு விளங்குதல் இல்லை.

"கற்றால் என்றதன் காரணம்"

பரிமேலழகரின் உரைச் சிறப்பினை உணர்ந்துகொள்ள ஈண்டு நாம், "கற்றபிறகு" என ஏனையோர் கூறுவதிலுள்ள பிழை யாது? "கற்றால்" எனக் கூறுவதனாலாம் சிறப்பு என்ன? என்று ஆராய்தல் வேண்டும். "உண்ட பிறகு வருவேன்" என்றால் உண்ணுதலாகிய தொழில் முடிந்து, அதன் பிறகு வருதலாகிய தொழில் நிகழ்கின்றமை போல, "கற்றபிறகு" என்றால் கற்றலாகிய தொழில் முடிந்து அதன் பிறகே நிற்றலாகிய தொழில் நிகழ்தல் உணர்த்தப்படும். "கற்றபிறகு" என உரைப்பதனால், கற்ற தொழிலுக்கு ஒரு முடிவுண்மை போலவும், கற்று முடித்த பிறகே அதற்குத் தக நிற்றல் வேண்டும் என்பது போலவும் பிறர் பிழைபடப் பிறழ்ந்துரை இடம் நிகழும். "கல்வி கரையில" வாதலின், அதற்கொரு முடிவுளது போலக் கூறுதல் அமையாது. ஒருவனது கற்கும் தொழிலுக்குத் தானும் முடிவுண்டு எனக் கூறுதல் திருவள்ளுவர்க்கு உடன்பாடன்று. அஃது, "என்னொருவன் சாந்துணையும் கல்லாத வாறு" எனத் திருவள்ளுவரே வினவுதலாற் புலனாகின்றது. மேலும், "பொய் கூறற்க" எனக் கற்கத் தொடங்கியவன், தன் கல்வி முடியுங்காறும் பொய் கூறிக்கொண்டே இருந்து, பல ஆண்டுகள் கழிந்த நிலையில் கல்வி முடிந்த பிறகே பொய் கூறாமல் நிற்க வேண்டும் என விதித்தல் திருவள்ளுவர் கருதியதன்று. ஒளி வருதலும் இருள் கழிதலும் ஒரே காலத்து உடன் நிகழ்தல் போல, கற்றலும் அதன் வழி நிற்றலும் ஒன்றையொன்று தழுவி உடனிலையாக நிகழ்தல் வேண்டும் என்பதே திருவள்ளுவர்க்குக் கருத்து. இவற்றையெல்லாம் கூர்ந்து நோக்கியே "கற்றபின்—கற்றால்" எனப் பரிமேலழகர் பொருள் கூறினர்! ஒரு சிறு சொல்லுக்குப் பொருள் கொள்ளுதற்கு, அவர் எத்துணை அளவுக்குச் சிந்தனை செய்துள்ளார்! மேலும், நூலாசிரியரின் கருத்தறிந்து, அதற்குச் சிறிதும் முரண்படாத முறையிலன்றோ அவர் உரை கண்டுள்ளார்? ஈதன்றோ உரை நயம்!

## இலக்கண நுட்பம்:

இம்மட்டோ! "கற்றபின்—கற்றால்" எனப் பொருள் கொண்டதனால், பரிமேலழகரின் கூர்த்த மதி நுட்பமும், சீர்த்த இலக்கண அறிவும் புலனாகின்றன. "கற்ற பிறகு" என உரை எழுதினோரெல்லாம் "கற்றபின்" என்பதனைப் பெயரெச்சம் போலக் கருதிப் பிழைபட்டனர். "பின்" என்பது இடைச் சொல்லேயன்றிப் பெயர்ச் சொல்லன்று; சொல்லியல்பெல்லாம் நுனித்தறிந்த நல்லறிஞராகிய பரிமேலழகரோ அதனை வினையெச்ச விகுதி எனத் தேர்ந்து ஒரு சொல்லேயாகக் கொண்டு, பிழைபடாப் பெற்றியிற் பொருள் எழுதினர். "தேர்ந்தபின் தேறுக தோறும் பொருள்" "கடுத்தபின் தேற்றுதல்யார்க்கும் அரிது" என இங்ஙனம் வினை எச்சமாக வரும் ஏனைய இடங்களிலும், இவ்வாறே அவர் விழிப்பாக இருந்து உரை செய்திருக்கும் அருமை மிகவும் பாராட்டற்பாலது.

(வரும்)

# உவமைக் கோர் இலக்கியம்.

(T. N. அருச்சுனன்.)

நவில்தொறும் நவில்தொறும் நயம் பயக்கும் நற் றிருக்குறளை, ஓர் நீதி நூல் என்று கூறுவதோடு நில்லாமல், உவமைக் கென்றே எழுதப்பட்ட ஒள்ளிய நூல் என்றும் கூறல் சாலும். அதில் கூறப்பட்டிருக்கும் உவமைகள் ஒவ்வொன்றும், கற்போர் உள்ளத்தில் தெள்ளத் தெளியப் பதிந்து விடுகின்றன.

மேற் புகன்ற கருத்தைத் தக்க சான்றுகள் காட்டி விளக்குவல். ஒருவன் வெளித்தோற்றத்தில் மிகக் கவின்பெற விளங்குகிறான். அவனது எழில் கண்டோரைக் கவர்கின்றது. சுருங்கச் சொல்லின் அவனைக் கண்டார் அவனையே கண்டாராக நிற்குமளவுக்கு அவனது எழில் நலமுறத் திகழ்கின்றது. ஆனால், ஒரு குறை மட்டும் அவனிடம் உண்டு. அது தான் பகுத்துணரும் திறன் இன்மை. நுணுக்கமான, ஆராயும் தன்மை பெற்ற அறிவு அவனிடம் இல்லை. அத் தன்மையோனை எதற்கு ஒப்பிடுவது? இங்கே வள்ளுவர் அவனுக்கு உவமையாகக் கற்பித்த பொருளை நோக்குவம். மிக்க வேலைப்பாட்டுடன் கலையழகு திகழ ஒரு மண் பொம்மையை அவனுக்கு ஒப்பிடுகின்றார். மண் பொம்மை யாங்ஙனம் அறிவு நீங்கி, வெறும் பொம்மையாய்ப் புலப்படுகின்றதோ, அத்தன்மையனே அவ்வெழில் படைத்தவனும் என்கிறார்.

நுண்மாண் நுழைபுலம்
இல்லான் எழில் நலம்
மண்மாண் புனைபாவை யற்று. (407)

இவ்வாறே, கல்லாத ஒருவன் அவையிற் பேசப் புகுதல், நகிலிரண்டும் இல்லாத ஒருத்தி பெண் தன்மையை விரும்பினாற்போன்றது, என்ற கருத்தமைந்த குறளிலும், உவமை, நம்மை உவகை யூட்டுகின்றது.

கல்லாதான் சொற்கா
முறுதல் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.
(402)

வள்ளுவர் உவமையைக் கையாளும் துறைகள் பற்பல. குறள் முழுவதுமே உவமையாகக் கூறி, உட்பொருளை எளிதில் விளங்கவைக்கும் ஆரிய ஆற்றலை அவரிடம் காணலாம்.

நுனிக்கொம்பர் ஏறினார்
அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி யாகி விடும்.

என்ற குறளில், மரத்தின்மேல் ஏறிய ஒருவன், அதன் உச்சாணிக் கிளைவரை சென்று அதன் மேலும் கிளையின் நிலையறியாது செல்வானேயாகில், அது இறுதியில் அவனது உயிருக்கே ஆபத்தில் முடியும் என்ற கருத்து பொதிந்த அக் குறள், எதையும் அளவுடன் ஆற்றவேண்டும் என்றும், அளவுக்கு விஞ்சினால் விளையும் பயனையும் விளக்குகிறது.

“எறும்பு ஊரக் கல்லும் தேயும்” என்னும் பழமொழி,

பீலிபெய் சாகாடும்
அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். (475)

என்ற குறளால் வலியுறுத்தப் பெறுகிறது.

இவ்வாறு குறள் முழுமையுமே உவமையாக அமைத்து ஓர் அரிய உட்கருத்தை விளக்கும் இவ்வகைச் செய்யுள், ‘முழுதுவமையணி’யின் பாற்படும்.

யானை எவ்வளவு பெரிய உடல் படைத்த மிருகமாக இருந்தாலும், ஊக்கம் படைத்த, ஆனால் அதனை விடச் சிறிய உடல் படைத்த, உள்ள உரம் பெற்ற புலியொன்று தாக்கினால் அதைக் கண்டு அஞ்சும்.

பரியது கூர்ங் கோட்ட
தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (599)

என்ற குறள், ஊக்க முடையார் ஆக்கம் பெறுவர் என்ற கருத்தை மேலும் நிலைபெறச் செய்கிறது. இவ்வாறு மிகச் சிறந்த உவமை நயங்களைக் கொண்டு மிக அரிய கருத்துக்களை எளிதில் விளக்கி விடுகிறார் வள்ளுவம் படைத்த வள்ளுவர்.

உறங்குவது போலும்
சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (339)

என்ற குறள் எவ்வளவு எளிதில், மிகப் பெரிய வேதாந்தக் கருத்தை விளக்கிவிடுகின்றது!

நவில்தொறும் நூல் நயம்
போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. (783)

அறிதோ றறியாமை
கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.
(1110)

என்ற குறள்கள் அவரது அறிவின் ஆழத்தையும், பண்பட்ட இல்வாழ்க்கையையும் சிறந்த உவமைகளால் எடுத்துக் காட்டுகின்றன.

இவ்வாறு குறளில் வரும் உவமைகளைக் கணக்கின்றிக் கூறிக்கொண்டே போகலாம்; அவற்றை அறிய அறிய ஆர்வமேலீட்டோங்கும் என்பது வெளிப்படை. சிறந்த உவமைகள் என்னும் வெள்ளத்தில், மாத்திரை என்னும் நீதிகளை வெகு எளிதில் நமக்கு நல்கிவிடுகிறார். இக் காரணம் பற்றியே, குறள் உலகத்தார் உள்ளத்து ளெல்லாம் இருப்பதில் வியப்பில்லையன்றோ?

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வன்; ஆதலால், நூல்களோடு ஒத்து ஒழுகுதல் உயர்ந்தாரோடு ஒத்து ஒழுகுதலாகவே முடியும்; ஆகவே, தாழ்ந்தோ ரியல்புகளை அறிந்து, உலகத்தில், பெரும்பாலார் அவர்களாதலின், அவர்களை நன்னெறிப்படுத்தும் செயல் முறை நடத்தைகளே இத்திருக்குறளிற் குறிப்பிடப் படும் ஒழுக்கமாகும் என்பது. அவ்வொழுகுதலைக் கற்றலாவது, அதனிற் பயிற்சியடைதல்.

## உன்னுருவோ வாழி!

(மணிமொழி)

திருவெல்லாம் சேர்ந்தொளிரும் தமிழொளியே நந்தம்
தீந்தமிழை உயர்கலையை நற்பண்பைச் சூழ்ந்த
இருளொழித்த ஒளிப்பிழம்பே அன்புருவே உழைக்கும்
இனமெல்லாம் போற்றுகின்ற இணையில்லா உழைப்பே
''முருகெ''ழுதித் திருநாட்டை அணிசெய்து ''பெண்ணின்
பெருமை''யினை மறந்தோர்க்கு நினைவுறுத்தி வாழ்வு
பெருமையுறத் ''தமிழ்த்தென்றல்'' அழகொழுகத் தந்த
பேரன்பே தமிழெல்லாம் உன்னுருவோ வாழி! (1)

விண்தோன்றி இன்பூட்டும் வெண்ணிலவோ முகந்தான்
விரிந்தெங்கும் மணம்பரப்பி மகிழ்விக்கும் மலரோ
மின்னுகின்ற புன்சிரிப்பு இயற்கையெனும் பெண்ணாள்
மண்ணுலகில் கொழிக்கின்ற அழகளிக்கும் சிரிப்போ
பெண்போலும் தாயுள்ளம் பெற்றொளிரும் பெரியோய்
பேசுகின்ற பேச்செல்லாம் மலர்பிலிற்றுந் தேனே
மண்ணுலகைப் பொன்னுலகாய் மாற்றுகின்ற தொழில் செய்
மக்களிடை காண்பதெலாம் உன்னுருவோ வாழி! (2)

கற்றாரும் மற்றாரும் திருந்திடவே நாளும்
கருத்துமழை பொழிந்திட்ட தமிழ்ப்பெயலே என்றும்
சிற்றறிவு படைத்தவர்கள் தம்முள்ளே கொள்ளும்
சிறுபூசல் அறச்சந்து செய்யுங்குணக் குன்றே
முற்றிலுமே மாறுபட்ட கருத்தெனினும் நன்கு
மதிக்கின்ற நற்பண்பை வளர்த்திட்ட நம்பி
பொற்புடைய திரு.வி.க! பொதுவுடைமைக் கொள்கைப்
பொதுளுதமிழ் நெஞ்செல்லாம் உன்னுருவோ வாழி! (3)

## முன்னேறும் பெண்ணே, கேள்?

(ஆதிரை)

குளியாட்டிக் குழல்வாரி உன்னைக்—கல்விக்
கூடத்திற் கனுப்பினள் உனன்னை
வெளியாகும் புதஎடு தன்னைக்—கற்று
வேகமாய் முன்னேறும் படியாகப் பெண்ணே!

விளையாட்டோ கல்விநீ சொல்லு—நல்ல
விருப்போடு அதையேநீ அள்ளு
சளையாது சளிக்காது கொள்ளு—நல்ல
சமர்த்தாகப் படித்தேநீ சகத்தோரை வெல்லு!

அறியாமை அலகையைக் கண்டு—நீயும்
அஞ்சாது அறிவமு துண்டு
தெரியாமை நோய்களையத் தொண்டு—நல்ல
தெளிவோடு ஆற்றடி தீந்தமிழ் கொண்டு!

கல்விக்கு நிகரேது பெண்ணே—நல்ல
கனிவோடு அதையேநீ துணிந்துகல் கண்ணே
கேள்விக்குச் சளையாதே பொன்னே—நல்ல
கேண்மையை நிலைநாட்டிப் பாடடி பண்ணே!


### முல்லைக் கொடி

8-ந் தளிர் கலைமகள்
விழாவிலிருந்து
தொடங்கும்.

* *

புதிய எழுத்துக்களில்
புதிய வகைகளில்
வெளிவரும்

* *

அன்பர்கள்
தம் கையொப்பங்களை
விரைவில் புதுப்பித்துக்
கொள்வார்களாக!

—செய்தியாளார்.



Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு. சென்னை


பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)